# Path to Dharma

## தர்ம நெறி (Dharma Neri)

## 74



Sri SankarPublications


KshethraVinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.


க்ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம்,ஸ்ரீமுன்னேஸ்வரம், சிலாபம், ஸ்ரீ லங்கா.

Author - B.S.Sarma

February 2014 பிப்ரவரி(தை/மாசி)







## Editorial

'Path to Darma' the monthly magazine, published by KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 74th issue this month. The foremost intention of this magazine is to converse the perceptions linked to Hinduism and its ceremonial rituals, customs and dharma, to the anxious readers. The elucidation and investigation from the readers are appreciated.

B.SivaramakrishnaSarma,

KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka.,February, 2014

## Opinion

அன்புமிக்க சர்மா அவர்களுக்கு வணக்கம்,

தங்களின் 73 வது பாததர்மம் கிடைக்கப்பெற்றேன். யாவும் சிவமயமாகவே இருக்கிறது.இந்து சமயத்தின் அடிநாதத்தை சிவன் வாயிலாக காட்டியுள்ளமை சிறப்பாக அமைந்திருக்கிறது. அருவம் இ உருவம் இ அருவுருவம்இஅத்தனையும் சிவத்துள் அடங்கும் என்று மிக அற்புதமாக காட்டியுள்ளீர்கள். சிவத்துக்கான அடையாளங்களையும் அவற்றில் பொதிந்து காணப்படும் அர்த்தங்களையும் பாமரரும் விளங்கும் வண்ணம் தந்தமைக்கு எனது மனமுவந்த பாராட்டுக்கள். சிவனோடு நின்று விடாமல் சக்தியினையும் காட்டி அதற்கான விளக்கங்கள் தந்தமையும் அருமை. தாயை போற்றும் தகைமை இந்துமதத்துக்கே உரித்தானது என்று எழுதும் உங்களின் துணிச்சலை மெச்சுகின்றேன்.தேவையான இடங்களில் பொருத்தமான படங்களை இணைத்தமையும் சிறப்பாகவே இருக்கிறது.மார்கழிமாதம் சைவர்களுக்கும், வைஷ்ணவர்களுக்கும் முக்கியமான காலமாகும்.திருவெம்பாவையால் சிவனும், திருப்பாவையால் விஷ்ணுவும் போற்றப்படும் வேளையாகும்.அதற்கு பொருந்துமாற் போன்று இந்துசமயத்தின் மூலமான சிவனையும் அவனது தோற்றத்தில் ஒருபகுதியான விஷ்ணு என்பதையும் வெளிப்படுத்தி 73 வது பாத தர்மத்தை அமைத்த உங்களது சிந்தனைக்கு மேலும் எனது மன்முவந்த பாராட்டுக்கள். ஆன்மீகப்பணி தொடரட்டும்.அனைவர்க்கும் அருள்கிடைக்கட்டும்.

வாழ்கவளமுடன்

எம்.ஜெயராமன்.

# The Prime planet Jupiter

By S.P.Kulasingam, Melbourne

Jupiter is the largest planet in the solar system. When ancient astronomers named the plant Jupiter for the Roman ruler of the gods and heavens (also known as Jove), they had no idea of the planet's true dimensions, but the name is appropriate, for Jupiter is larger than all the other planets put together in the solar system and the fifth in distance from the sun. It takes nearly 12 Earth years to orbit the Sun, and it rotates once about every 10 hours, more than twice as fast as Earth. It has more than 60 known moons, one larger than the planet Mercury and three larger than Earth's Moon Jupiter has an equatorial diameter of about 143,000 km (88,900 miles) and orbits the Sun at a mean distance of 778 million km (483 million miles).

The above is the basic astronomical data of the planet Jupiter and now I will move on to give the astrological significance of this planet and the impact of this planet on the individual horoscopes. Astrologically, Brihaspathi or Jupiter is a giant among the planets and to ally with mythology he is the teacher and preceptor to Devas for which he is called Guru and by which name Jupiter is widely called as Guru in the Indian Astrology. In astrology, everything good, generous, idealistic and of an expansive nature goes with Jupiter, A strong Jupiter in a horoscope makes one feel conscious of his own responsibility and obligation in Tamil there is a proverb which says "Guru parthal kodi nanmai" means the aspect of Jupiter bestows core of benefits.

Jupiter is golden and is the personification of wisdom. He is the Karaka (indicator) for wealth, offspring and genius. Considering from the first house in the Zodiac Medam or Aries,, Jupiter owns the 9$^{th}$ house Dhanu or Sagittarius which is also his Moolatrrikona house, it is a positive masculine, fiery and common sign, carrying the symbol of arrow. It is hot and dry, dual and double bodied as the first half is human and the second half animal.No planet gets exalted or debilitated in this sign and this house governs Baghya or fortune.

The other sign he owns is Pisces or Meenam, the natural 12$^{th}$ house. It is a negative feminine, watery and common sign. The qualities of this sign are mostly opposite to the fiery, masculine attributes of Sagittarius. This sign carries the symbol of an ocean with two fish, is the natural last sign of the zodiac. So the other Jupiterian attribute of Moksha or emancipation has been rightfully assigned to this sign

Since Jupiter comes to signify all the attributes of the 9$^{th}$ house Baghya or fortune and wealth whenever you find in a horoscope, the planet Jupiter, by occupation or aspect influences the 9$^{th}$ house it augments the qualities attributed to this house. Jupiter casts its aspect on the 5$^{th}$ house and the 9$^{th}$ house from the house it occupies and also the 7$^{th}$ house which is common to all the planets as this house will be straight opposite to the house it occupies.This can occur only if Jupiter occupies Lagna, the 1$^{st}$ house in a native horoscope. Jupiter can cast it aspect to the 9$^{th}$ house only if it occupies the 1$^{st}$ house , 3$^{rd}$ house and the 5$^{th}$ house.

Jupiter is the best benefic for the Medam or Aries and the Katakam or Cancer Lagna born individuals, as they are the only individuals who will enjoy the blissful ownership of the 9$^{th}$ house of Jupiter. More than Kataka Lagna , Meda Lagna born are most favoured in this respect as Dhanu or Sagittarius where Jupiter is very strong befitting his nature and for those who has this house as their 9$^{th}$ house either occupied by Jupiter or fallen under his aspect is a divine blessing to the native and the native's father.

For the beneficial results to be fully realised Jupiter should not be in the company of any malefic like Rahu or Kethu which goes under Guru Chandala yoga. However Rahu in Dhanu is known as Kodhanda Rahu and in combination with Jupiter, Rahu gets empowered to confer good results under his Major Dasa period.

Jupiter is exalted (Uchcha) in Katakam or Cancer and debilitated (Neccha) in Makaram or Capricorn. He is friendly to the Sun, Moon and Mars, neutral to Saturn and has as his enemies Venus and Mercury although Jupiter himself is neutral to them. Jupiter is the foremost malefic to the Lagnas Idapam or Taurus and Thulam or Libra since he becomes the owner of 6th and 11th house for Idapam and 3rd and 6th houses for Thulam, The nature attributed to these houses does not represent the wishes of the Jupiter and are mutually conflicting.

He is a partial malefic to Makara born for which he becomes the owner of the 3rd and 12th houses. From being a benefic Jupiter becomes a functional malefic to Idapam and Thulam lagna born natives and the best houses of occupation for Jupiter for Idapam born are either 6th , the 8th or the 11th and for Thulam born either 3rd, 6th , 8th or the 12th for Makara born too Jupiter is a functional malefic being the owner of 3rd and the 12th house and his best houses of occupation are either 3rd, 6th, 11th or 12th.

Jupiter has Karakatatwas (indicators) for five houses 2nd house governing family, wealth, 5th house issues, 9th house fortune or luck, 10th house profession or karma and 11th\house income. Whenever Jupiter transits the 2nd 5th, 7th and 11th houses from the Moon (Chandra) rasi in the horoscope good results are indicated of matters connected with the above rasis. When Jupiter transiting or cast its aspect on his own radical position especially the 2nd house confer good income. When Jupiter transit the house occupied by the lord of the 7th house either in the Rasi or in the Navamsa, then the marriage, when due, is indicated.

The Constellations or stars governed by Jupiter are Punarpoosam (1st to 3rd pathams in Mithunam or Gemmini and the 4th Patham in Katakam or Cancer), Visakam (1st to 3rd Pathams in Thulam or Libra and the 4th Patham in Vrichikam or Scorpio) and Poorattadi (1st to 3rd Pathams in Kumbam or Aquarius and 4th Patham in Meenam or Pisces). Punarpoosam 2nd and 4th Pathams, Visakam 2nd and the 4th Pathams and Poorattadi 2nd and 4th Pathams are good due to all 2nd Pathams will be in the Chandra exalted rasi of Idapam or Taurus in the Navamsa and similaraly all the 4th pathams will be in the Jupiter's exalted rasi of Katakam or Cancer in the Navamsa and in addition this rasi is also owns by Chandra. Purattathi 4th padam derives additional benefit as Chandra will be in the Jupiter's own house of Meenam or Pisces in the rasi.

The combination of Jupiter and Moon (especially from the 8th day of the bright-half to the 8th day of the dark-half) is good causing Guru Chandra Yoga ensuing prosperity When moon is found in a Kendra house 1st, 4th , 7th or 10th to that of Jupiter confer Gaja Kesari Yoga resulting in giving strength to the native to overcome all obstacles. The best Gaja-Kesari Yoga is said to exist when Moon is in the 7th or 10th and Jupiter in the 4th, the manifested results are early married life, long lived mother and owner of properties the involvement of the 4th and 10th with the Moon in the 10th is a good disposition for affection and attachment. The Moon in the 1st, 4th or the 10th and Jupiter in the 7th is also an other favourable disposition.

When Moon is occupying the 6th and 8th houses from Jupiter , this is Sakata Yoga which produces results mixed with happiness and sadness and fluctuating fortune. The combination of Jupiter and Mars is also good going under the name of Guru-Mangala Yoga especially for Mesha, Kataka ,Simha. Vrichika, Dhanus & Menna lagna natives this combination will

invariably result in a Kendra-Konathipathy relationship, the best in relation-ships to confer desirable results. Jupiter being in Lagna casting his aspect on 5$^{th}$, 7$^{th}$ and 9$^{th}$ houses will bless all these three houses issues, wife and fortune or luck. Jupiter in his own house or in his exaltation house and occupying the 1$^{st}$, 4$^{th}$ , 7$^{th}$ or the 10$^{th}$ causes one of the Mahapurusha Yogas, the Hamsa Yoga.

The benefices Jupiter, Venus and Mercury are likely to become inauspicious when they own Kendra Houses 1$^{st}$, 4$^{th}$, 7$^{th}$ or the 10$^{th}$ and occupy a house other than their own, here, they suffer from Kendrathipathiya Dosha. In this respect Mithuna or Gemini native and Kanni or Virgo native are forced to bear this Kendrapathiya Dosha as Jupiter for these two signs own either 4$^{th}$ and the 7$^{th}$ or 7$^{th}$ and the 10$^{th}$. Specially the 7$^{th}$ house ownership of Jupiter is dreaded unless there are counteracting influences such as Guru Chandra Yoga or Gajakesari Yoga or Jupiter as the 7$^{th}$ house lord doesn't combine with any Kona lords such as the 5$^{th}$ or the 9$^{th}$ house lords.

Jupiter in the 7$^{th}$, Mercury in the 6$^{th}$ and Venus in the 8$^{th}$ to the Moon causes Adhi Yoga Yoga, this yoga elevates the native from humble beginnings to the top level. Good Adhi Yoga means these planets should not combine with any malefics like Sun, Mars, Rahu or Kethu . A pure undiluted Adhi Yoga is a blessed gift. Similarly these planets occupying the same houses as in the Chandra Adhi Yoga in relevant to Lagna also results in Lagna Adhi Yoga which is also good as Chanra Adhi Yoga.

When Jupiter occupies the 2$^{nd}$ house from the Moon produces Sunapa Yoga and when in 12$^{th}$ House from the Moon produces Anapa Yoga and also when Jupiter occupies 2$^{nd}$ house from Sun produces Vesi Yoga and when in the 12 th house produces Vasi Yoga. All these yogas emanated from the position of Jupiter to that of Moon and Sun strengthen the position of these two planets and augment their potentialities to do good. However in a horoscope only one of these yogas is the possibility unless the Sun and Moon are together in one sign where two of these yogas will manifest.

It takes nearly one year for Jupiter to transit a sign. In Gochara, whenever Jupiter transit the 2$^{nd}$, the 5$^{th}$, the 7$^{th}$,the 9$^{th}$ or the 11$^{th}$ houses from the Moon sign (Chandra Rasi) good results are indicated of matters connected with the above houses. In other places, Jupiter's transit is considered bad. Its transit over its radical position in birth chart always produces good results of matters signified by that house specially so when the house is the 1$^{st}$, the 2$^{nd}$, the 4$^{th}$, the 5$^{th}$, the 7$^{th}$, the 9$^{th}$, the 10$^{th}$ or the 11$^{th}$. When Jupiter transit over the radical position of Moon in birth chart, the results will be quite opposite.

Regarding the retrograde Jupiter many views prevail but most of them are of the opinion in retrogression Jupiter derives strength to that of an exalted planet and confer beneficial results. A separate sense of the term retrograde motion refers to the apparent brief reversal of the motion of a planet as seen from Earth; the effect depends upon the difference in orbital speeds of the planets. The planet Jupiter start retrograding when it is 8 signs and 05 degrees (245 degrees) away from the Sun and resumes its forward motion when it is 3 signs and 25 degrees (145 degrees) away. In a year the planet Jupiter will be in retrogression for a period of approximately four months.

# இந்து சமய காட்டும் கடவுள் உருவங்கள் - தொடர்ச்சி

## கணபதி (விநாயகர்)

எந்தவிதமான சமயச்சடங்குகளையோ கிரிகைகளையோ தொடங்குவதற்கு முன்னர் கணேசப்பெருமானை முதலில் வணங்கியே இந்துக்கள் தமது காரியங்களை முன்னெடுப்பார்கள். நாம் எடுக்கும் முயற்சிகளை சித்திக்கும்படி அருள் பாலிப்பதும், தடைகள் வராமல் தடுப்பதும், தமக்கு முதல் வணக்கம் செய்யாது விடும்போது இன்னல் பலவற்றைக் கொடுப்பவராக விநாயகர் கருதப்படுகின்றார்.


இந்து சமயப் புராணங்களின்படி விநாயகராகிய கணேசப்பெருமானே அன்னை பராசக்தியாரினதும் சிவபெருமானதும் மகனாவர். கீழே எடுத்துக்காட்டியபடி, கணேசப் பெருமானின் தோற்றத்தில் இணைந்திருக்கும் யானையின் தலையும், மானிட, பூத உடலமைப்பும் இந்து தவ சிரேஷ்டர்களால் எண்ணக்கருத்தில் உணர்ந்து தத்துவ தரிசன அடிப்படையில் விளக்கப்பட்டு, ஆன்மீக முக்கியத்துவம் பெறுகின்றது. விநாயகரது அகண்ட வாய் லௌகீக வாழ்க்கையில் இயற்கையாக அவர்க்கொள்ளும் மனித அபிலாஷையின்படி அமையும். பெரிய சுளகு போன்ற செவிகள், அறிவைக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலையும், அருளுதலையும், பக்தர்கள் வேண்டிப் பிரார்த்திக்கும் வரங்களை கேட்டு நல்குதலையும், குறிக்கின்றன. யானையின் தலை புத்திக் கூர்மையையும், விளங்கிக்கொள்ளும் திறமையையும், பகுத்தறியும் புத்திக் கூர்மையையும் குறிக்கின்றன.


ஒரு சிறு ஊசியையும் நிலத்திலிருந்து தேடி எடுக்கவும், மிகவும் பாரமான மரங்களை வேருடன் அகழ்ந்து, பிடுங்கி எடுக்கவும் தனது துதிக்கையினை யானை பயன்படுத்துவது போல கணேசப்பெருமான் தனது தும்பிக்கையால் மனிதகுலத்துக்கு அருள் பாலிக்கின்றார். மிகவும் நுண்ணிய அகவுணர்வுகளை, ஆராயும் திறமையையும் இது குறிக்கும்

இரு தந்தங்களும் மனிதனின் ஆளுமை நடத்தைகளாகிய இரு அம்சங்களையும் அவற்றில் வலப்புறம் அமைந்த தந்தம் புத்தியின் தெளிவாகிய ஞானத்தையும், அதனால் கிடைக்கும் பயனையும், ஒடிந்திருக்கும் இடக்கொம்பு, மனஎழுச்சியினால் ஏற்படும், தீவிர மனக்கிளர்ச்சியினையும் அதனால் அடையும் துர்ப்பயனையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது.

ஒடிந்த இடக்கொம்பு துர்ப்பயனை விளைவிக்கும் மனக்கிளர்ச்சியை புத்தியால் அடக்கி ஆளும் வல்லமையை விருத்தி செய்தல் வேண்டும் என்பதைக் குறிக்கும். மனக்கிளர்ச்சியை அடக்க கூடிய வல்லமையால் பூரணத்துவம் கிட்டும்.





யானையின் கண்கள், சிறிய பொருளையும் பெரிதாகக் காட்டும் தன்மையுள்ளதால் யானை பார்க்கும் எப்பொருளும், அதற்கு உரிய அதன் உருவைவிடப் பெரிதாகவே தோற்றும். எனவே விநாயகப் பெருமானின் “யானை” கண்கள் ஒருவனுடைய ஆற்றலை பெரிதாக கருதி தனது பெருமையையும் தாழ்வான ஒன்றாக மதித்து அடக்கமுடையவராக வாழ்தலைக் காட்டுவதாக உள்ளது.

விநாயகரின் இடது பக்கம் மனக்கிளர்ச்சியையும்ஈ வலது பக்கம் அறிவாற்றலையும் காரண காரியத் தொடர்பையும் அறியும் புத்திக் கூர்மையையும் குறிக்கின்றன. வலக்கால் இடக்காலினில் தொங்கவிட்டிருக்கும் இருப்புமுறை ஆசனம், வாழ்க்கையில் வெற்றியடைந்தலைப் பெறவேண்டின் ஒருவர் பகுத்தறியும் புத்திக்கூர்மையையும், ஞானத்தையும் அவாவி நின்று மனக்கிளர்ச்சியை வெற்றி கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டுகின்றது.


நான்கு திருக்கரங்களும் அவருடைய சர்வவல்லமையும் எங்கும் வியாபகமாகியுள்ள தன்மையையும் காட்டும். மேல் இடக்கரத்தில் தங்கியுள்ள பரசும், மேல் வலக் கரத்தில் தாங்கியுள்ள தாமரைமலரும், ஆன்ம பூரணத்தை ஒருவர் அடையவேண்டின் உலகபந்தங்களைத் தறித்தும், மனக்கிளர்ச்சியை ஒடுக்கி அடக்கி ஆளவும் வேண்டும் எனவும் குறிக்கின்றன. இப்படி வாழ்வதால் உலக பந்தங்களில் சிக்கிக்கொள்ளாமல், தாமரை இலைமேல் உள்ள தண்ணீர் போல, இலையில் ஒட்டிக் கொள்ளாமல் வாழ முடியும் என்றும், வரதஹஸ்தம், எனப்படும் கீழே உள்ள வலது கரம் அருள்பாலிப்பதையும் காட்டுகின்றன.

விநாயகரின் மனித உடலையொத்த பகுதியின் மனித இதயம், அன்பையும் எல்லோருடனும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் குறிக்கும். விநாயகரின் உடலில் சிவப்பு மஞ்சள் வஸ்திரத்தால் அலங்காரம் செய்வது வழக்கம். மஞ்சள் நிறம் தூய்மை, சமாதானம், சகவாழ்வு, உண்மை என்ற பண்புகளையும், சிவப்பு நிறம் உலகின் செயற்பாடுகளையும் குறிக்கும். இவையே ஒரு உதாரண புருஷனிடம் எதிர்பார்க்கும் பண்புகளாம்.

விநாயகரின் பெருவயிறு சற்குண நிறைவுடைய ஒருவனின் மனம் விசாலமாயும் மனிதத்துவம் நிறைந்த தாயும், இன்பதுன்பங்களை சமநிலையில் ஏற்று வாழ்வில் ஜீரணிக்கும் தன்மையும் உள்ளதை குறிக்கின்றது. லட்டு- மோதகம் நிறைந்த தாம்பாளம் கணபதி முன் (தரையில்) வைக்கப்பட்டிருத்தல், அதை எலி கணபதியின் பாதங்களின் கீழே இருந்து பார்த்துக் கொண்டிருத்தல் ஆகியவை, அசுரத்தனமுள்ள எலியை தன்பாதங்களின் கீழ் வைத்திருப்பது மக்கள் மனத்து எழும் ஆசைகளை அடக்கிக்கொண்டு சிறப்பாக வாழ்வதை காட்டும். அதை உணர்த்தவே பெருச்சாளியை (மூஷிகம்) வாகனமாக கணேசன் கொண்டுள்ளார்.

## ஸ்கந்தன் (முருகன்)

ஸ்கந்தப் பெருமானைக் குமாரக் கடவுள், கார்த்திகேயன் சண்முகப்பெருமான், சுப்பிரமணியன், எனப் பற்பல நாமங்களால் அழைப்பர். இந்து சமயப் புராணங்களின்படி இவர் சிவபெருமானின் இரண்டாவது குமாரனாகவும், கணேசப் பெருமானின் இளைய சகோதரராகவும் வணங்கப்படுகின்றார். சேவலைத் தன் கொடியிலும் மயிலைத் தனது வாஹனமாகவும் கொண்டுள்ளார். முருகனின் மயில், ஒரு பாம்பை தனது பாதங்களில் அழுத்தி, பாதத்தின் நகத்தினால் இறுக்கமாகப் பிடித்து நிற்பதைக் காணலாம். அவருடைய இருசக்திகளாக விளங்கும் இச்சாசக்தியும் கிரியாசக்தியும் வள்ளி, தெய்வயானை என்னும் நாமங்களில் அழைக்கப்படுவதையும், “ஸ்காந்தம்” “சிவரகசியம்” போன்ற நூல்களில் தெய்வீக சம்பந்தமும் மானிட சம்பந்தமும் பெற்றுள்ள கடவுளாக முருகன் போற்றப்படுகின்றதைக் காணலாம். முருகப் பெருமானின் தோற்றம்பற்றி கந்தப்புராணம் மிக விரிவாக்க கூறுகின்றது. யோக நிஷ்டையிலிருக்கும் போது சிவபெருமானுக்கு காமம் உண்டாகும்படி தன் மலர் அம்புகளை எய்தபோது மன்மதனின் சிறுமையையும், செய்யக்கூடாத ஓரலுவலை மேற்கொண்டமையால் ஏற்பட்ட அவனுடைய குற்றத்துக்காக தனது நெற்றிக்கண்ணால் அவனை எரித்து, உடல் அற்ற உயிராக “அனங்கன்” என நிலைக்கச் செய்தமையையும், பின்னர் ஆறு தீப்பொறிகளும் வாயுவினால் ஆகாய வெளியூடாக எடுத்துச் செல்லப்பட்டு கங்கா நதியில் விடப்பட்டதையும் பின்னர் சூட்டைத்தாங்கிக்கொள்ள முடியாமல் கங்கை, “சர” என்ற தர்ப்பைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ள சரவணப்பொய்கையில் (மானசரோவில்) விட்டுவிட்டமையையும் இக்காரணத்தால் முருகக்கடவுள் பஞ்ச பூதசம்பந்தமுடையவராக விளங்குகிறார் என்பதையும் இதனால் சிவபெருமானின் தேஜஸ் - ஞானஒளியும் பிரமையும் உள்ள ஆறு திருமேனிகளையுடைய குழந்தைகளாக சரவணப்பொய்கையில் வளர்கையில் பார்வதிதேவி ஆறு குழந்தைகளாக சரவணப் பொய்கையில் வளர்கையில் பார்வதிதேவி ஆறு குழந்தைகளையும் கூடி அணைத்து ஒருடலும் ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் இரு செங்கமல பாதங்களால் அழைக்கப்பட்டதையும் கந்தப்புராணம் கூறுகிறது.



திவ்விய தேஜஸ் கொண்ட சிவனின் அகப்புற ஆக்க சக்திகளையும் பூதங்களையும் ஒரே உருவில் திரட்டியதாக சண்முகனின் திருமூர்த்தம் அமைந்துள்ளது. திருமுருகனின் அவதாரம் பற்றிய தத்துவார்த்தங்களை ஞானிகளாலும், அறிஞர்களாலுமே விளங்கிக் கொள்ள முடியும். அவருடைய அறியவொண்ணா அதிசயமான தோற்றம், சந்தர்ப்பம், வளர்ப்பு என்பன தேவை கருதி நிகழ்ந்தன. சிவனுடைய அறிவாற்றலையெல்லாம் ஒருங்கே திரட்டிய மூர்த்தமாக சண்முகப் பெருமான் விளங்குகின்றார். வேல் எனப்படும் அவருடைய பிரதான ஆயுதமானது, நுனி கூராகவும் நடு அகன்றும், அடி ஆழமாக நீண்டும் காணப்படுகிறது. மனத்தின் ஒருமுனை கூர்மையும் அதனை, அறியாமையாகிய அசுரத்னத்தை ஒழித்து அழிப்பதுக்கும் தனது தொழிற்பாட்டின் குறிக்கோளாகிய துஷ்டராகிய அசுரர்களை அழிப்பதிலும் ஞானசக்தியைக் குறிக்கும் வேலை சண்முகப்பெருமானாகிய ஸ்கந்தசுவாமி உபயோகிக்கின்றார்.

சிவ பார்வதியின் மூலமாக ஒரு புதல்வன் தோன்றினால்தான் சூரபன்மன் முதலியோரின் அழிவு ஏற்படமுடியும் என்பதால் தேவர்கள் மன்மதனைக் கொண்டு சிவனின் யோக நிஷ்டையை மன்மதபாணங்களால் குலைத்ததால் கந்தனின் பிறப்பு ஏற்படடு அவர்களே காரணபூதராகவும் "அரக்கர் பாவமும் அல்லவர் செய்த தவமும்" சேர்ந்த புண்ணியத்தின் விளைவாகவே கந்தனின் உதயம் ஏற்பட்டது. "சேனானியென்"னும் தகுதி பெற்று கந்தன் சூரபத்மனுடன் போர் புரிந்து அவனை அழித்து, சேவலும் மயிலுமாக முருகன் ஏற்றுக் கொண்டார். கந்தசஷ்டி எனப்படும் காலத்தில் சூரன்போரை முடிவாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படும் விரதம் சூரனை வென்ற வெற்றி விழாவாகும். கார்த்திகை (October - November) மாதகாலத்தில் இவ்விரதம் இந்துக்களால் கைக்கொள்ளப்படுகின்றது.



காளிதாசனின் குமாரசம்பவம் என்னும் நூல் முருகனின் தோற்றம், வளர்ப்பு, சூரனின் அழிவு (போர் முடிவு) என்பனவற்றை எடுத்துக்கூறுகின்றது. அருணகிரி நாதரின் திருப்புகழ் முருகபக்தர்களால் பாடப்படுகின்றது. சைவர்களுக்கு தேவாரதிருவாசகங்களும் திருமுறைகளும் எப்படியோ, வேதங்கள் இந்துக்களுக்கு எப்படியோ, அப்படி உயர்வாகவே அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், வேல், மயில், சேவல் விருத்தங்கள் முருகபக்தர்களால் போற்றப்படுகின்றன.

குமாரதந்திரம் முருகவழிபாட்டையும் மகாபாரதத்தில் ஸ்கந்தனது சூரன் போர்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நடராஜர் (Lord of Dancing)

சிவமூர்த்தங்களுள் ஒன்றான நடராஜ மூர்த்தம் பொதுவாக ஆடலரசன் என்ற பெயரால் பிரபலம் வாய்ந்தது. சோழ சாம்ராஜ்ய (880 கி.பி 1279 கி.பி) பொற்காலத்தில் நடராஜ உருவம் தென்னிந்தியாவில் 9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளில் அறிமுகமானது. பிரபஞ்சத்தின் அசைவை நடனம் குறியீடாக விளக்குகின்றது. இரு பக்கமுள்ள உடுக்கையை ஏந்திய முன் வலக்கை, படைத்தலைக் குறியீடாகக் காட்டும். உடுக்கையானது பிரபஞ்ச அசைவுக்கிணங்கிய தாளலயத்தில் அடிகக்கப்படுகிறது. சிவதாண்டவத்துக்கேற்ற லயவின்யாசத்துக்கான இசையை உடுக்கை ஒலி கிளப்புகிறது. முதலில் தோன்றி விரிவடையும் பிரபஞ்ச ஒலிக்கு, இவ்வுடுக்கை ஒலிச்சக்தி முதல் மூலகாரணமாக அமைகிறது. உண்மையைத் தொடர்புபடுத்துவதற்கு ஒலி அடிப்படையாக விளங்குகிறது. உடுக்கையானது ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் படைப்புக்கு இன்றியமையாதவர்களாக இருப்பதையும், இருமுக்கோணங்கள். அவை ஒன்றையொன்று ஊடுருவும் போது ஒரு அறுகோணத்தைத் தோற்றுவிப்பதாக இருப்பதையும், இருமுக்கோணங்கள். அவை ஒன்றையொன்று ஊடுருவும் போது ஒரு அறுகோணத்தைத் தோற்றுவிக்கும் கோலம் பிரபஞ்ச அழிவைக்குறிக்கும்.



நெருப்பை ஏந்திய முன் இடது கரம் அழித்தலையும், அதனைத் தொடர்ந்து வரும் மீண்டும், மீண்டும் படைத்தலையும் குறிக்கும். நெருப்பு ஆன்மாவின் அசுத்தத்தை சுத்தமாக்கும். இரு பின்கரங்களும் படைத்தலினதும் அழித்தலினதும் சமநிலையைக் குறிக்கும். திருவாசியாக விளங்கும் வட்டமான தீப்பிழம்பு சம்சார (வாழ்க்கைச் சக்கரத்தை) த்தைக்குறிக்கும். இதனால் வாழ்வும் தாழ்வும் மாறி மாறி ஏற்படும்.

கீழ் வலது கரத்தின் முத்திரை “அச்சம் வேண்டாம்” என்பதையும், கீழ் இடது கரம், “இதோ ஒரு வழி உண்டு” என்று குஞ்சிதபாதத்தைச் சுட்டும் இந்த நிலையானது பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற சுழற்சியிலிருந்து விடுபடுவதற்கு ஒரு மார்க்கம் உண்டு என்பதை இக்கோலம் காட்டுகிறது. கையின் அமைப்பு ஒரு வழி உண்டு என்பதை உணர்த்தி நிற்கும். தூக்கிய இடது பாதம், மறுபிறப்பிலிருந்து விடுபடுவதைக் குறியீடாகக் காட்டி மோட்ச பரிநிர்வாணத்துக்கு நம்பிக்கையூட்டும். வலது காலால் நசிக்கப்படும் முயலகன் என்னும் குட்டை வடிவான தீய சக்தியாக அல்லாமல் மோட்சத்தை அடையமுடியாத ஆணவமான கெட்ட அறிவின்மையைச் சுட்டும். குறள் வடிவம் மறதி, உண்மையை

அறிந்துகொள்ள இயலாத தன்மை, உதாசீனம் என்பவற்றையும் குறிக்கின்றது. பாதங்களில் ஒன்று ஞானத்தையும் மற்றையது மறதியையும் குறிக்கும்.

சிவனின் நடனத்தோற்றத்தில் ஜடா முடி காற்றில் பறந்து அசைந்தாடுவதைக் காணலாம். ஜடா முடியின் இடப்பாகத்தில் கங்கையைத் தரித்திருப்பதைக் காணலாம். இது. இயற்கையை இறைவன் தன் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதைக் காடடுகிறது பகீரதனில் தவத்தால், தரையிறங்கிய கங்கை தன் பிரவாகத்தால் தரணியை அழிக்காமல் இருப்பதற்காக சிவன் கங்கையைத் தன் சடையில் வைத்து அதன் சக்தியைக் கட்டுப்படுத்தி நாட்டை நீர்வளம் கொண்டதாக்கி மக்கள் பாபங்களைத் தன் தீர்த்தத்தால் கழுவியும் செல்வதைக் காணலாம். மோட்சத்தை அடைய விரும்பும்போது ஏற்படும் ஆணவத்தை சர்ப்பங்கள் குறிக்கின்றன. ஆணவத்தை அடக்கவேண்டும் என்பதற்காக நாகாபரணங்களை நடராஜப் பெருமான அணிந்துள்ளதை இது சுட்டி நிற்கும் நாகங்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டையும் சுட்டுவதுடன், பிறப்புச் சுழற்சியையும் குறிக்கும். நடராஜ வடிவத்தின் தளத்திலிருந்து வெளியே நீட்டப்பட்டிருக்கும் உயர்த்திய கால், உருவற்ற அருவ நிலையில் இறைவனைக் காணும் மோட்ச நிலைக்கு இட்டுச் செல்வதைக்குறித்து நிற்கும்.

நடராஜ விக்கிரகம், தாமரைப் பீடத்தில் நடனமாடுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய கலாச்சார மரபான தாமரைமலர் படைப்பாற்றலைக் குறிப்பது. ஜடாமுடியில் உள்ள வளர்பிறை ஞான ஒளியையும், மனச்சாட்சியையும் குறிப்பதாகும். காதணிகளில் இடது பக்க அணி தோடு (பெண் அணிவது) எனவும் வலது பக்க காதணி குண்டலம் எனவும் சொல்லப்படுகிறது. சிவனின் அர்த்த நாரீஸ்வர மூர்த்தத்தை காதணிகள் சுட்டுவன. குண்டலம் என்பது முதலையின் தலையையும் மீனின் வாற்பகுதியையும் சேர்த்து வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. தோடு சுருளாக அமைந்துள்ளது. நெற்றிக்கண் தூரதிருஷ்டி நோக்காகப் பார்க்கும் ஆற்றலையும், ஞான திருஷ்ட்டியையும் குறிக்கின்றது. கபால மலைகளை சிவன் அணிந்திருப்பது, சிவன் மரணத்தை வென்றதை வென்றதை எடுத்துக் காட்டுவதாகும்.

தெய்வீகமானதும் ஆடல், லயம், தாளக் கட்டுப்பாடு என்பவைகளுடன் 108 நடனத்தோற்றங்களை நடராஜர் ஆடியதன் மூலம் பிரபஞ்ச நியதியாகிய ஆன்மீகச் சட்டங்களை விளக்கியுள்ளார். கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் சிவனின் நடனத்தை தத்துவார்த்தமாக விளக்கியுள்ளார்.

"பிரமனுடைய இரவு நீண்டதோர் கால அளவாகவும், அப்போது இயற்கை ஜடமாக இயங்க முடியாத நிலையில் உறக்கத்தில் இருப்பதாகவும், எப்போது சிவன் தனது டமருகத்தை ஒலித்து, படைத்தலை அனுமதிக்கின்றாரோ அப்போதே பிரமன் விழித்து படைத்தலை தொடங்குவதாகவும் பஞ்சகிருத்திய நடனமாகிய சிவதாண்டவம் தொடங்கி நடைபெறுகிறது. வடவாக்கினி மூலம் அழித்தல் நடைபெறும் போது, நாமங்களும் உருவங்களும் அழிவதுடன் ஒரு பெரு வெளியும், காலமும்" காலமல்லா நிலையும் ஒருமைப்பட்டு, இன்னதெனக் கூறமுடியாத தொடர்ச்சியானதும், மாறிக்கொண்டிருக்கும் நிலையும் காலநிர்ணயம், கூற முடியாத அகன்றதோர் இருள் சூழ்ந்த நிலையுமாக இருக்கும்.

பிரளய காலத்தின் இறுதியில் ஒரு ஒழுங்கான முறையில் கோள்கள், அணுக்களின் துகள்களின் இயக்கம், கூர்ப்போன்றனயான மறை சிந்தனாசக்தியின் மூலம் உணரலாம்.

மேல் இடக்கரத்தில் அரைவட்ட வடிவில் (அர்த்த சந்திரமுத்திரை) யில் அமைந்திருக்கும் அக்கினிக்கொழுந்து, பிரளயத்தின்போது, படைக்கப்பட்டனவெல்லாம் அழிக்கப்படுதலையும் வலது பக்க துடியும், இடது பக்க அக்கினியும் படைப்பு, அழித்தல் ஆகிய இரண்டையும் சமநிலைப்படுத்துவதாக உள்ளது. பிரபஞ்சமே நடன தளமாகவும் அதிபயங்கர ஊர்த்துவ தாண்டவமாகவும் அபய முத்திரையாக கீழ்தரம் வலது சாந்தியையும் பாதுகாப்பையும் ஆன்மாக்கருளுகின்றது. தூக்கிய திருவடியை இடது கீழ்க்கரம் மார்புக்கு குறுக்காக நீண்டு, "ஆன்ம விடுதலைக்கு உதவும் எனது இந்த பாதத்தினை சரணம் அடையுங்கள்" எனக் குறிப்பால் உணர்த்துகின்றது. யானையின் துதிக்கைபோல் நீண்டு பாதத்தை சுட்டிக்காட்டும் கரம், கஜ ஹஸ்த முத்திரை கொண்டு திகழ்கின்றது.

முயலகன் என்னும் குறள் வடிவமான உடலின் மீது கால் ஊன்றி நடனம் பயிலுதல் இறைவனின் தெய்வாம்சமான எல்லாவற்றையும் அடக்கி, தானே மேலான தன்மையை நடராஜவடிவம், குறிக்கும் "அபஸ்மாரபுருஷனாகியவனாகக் காட்டப்பட்டுள்ள புருஷன் மறதி உதாசீனம், சோம்பல், ஆகியவற்றினை குறிக்கின்றது. இவற்றிலிருந்து விடுதலை பெறுதலை ஆன்மாவின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. திருவாசியாக, சுற்றியுள்ள வட்டத்தில் (பிரபாமண்டலம்) பிரபஞ்சத்திருள்ள அண்டங்களிலுள்ள உயிரிரங்களையும், ஜந்துகளையும் குறிப்பதாகவும் அவ்வுயிர்களின் உயிரோட்டமான அசைவுகளையும் - நடனமாக - உயிர்ப்பு நடனமாகச் சுட்டுகின்றது. ஓம் என்ற பிரணவத்தைக் குறிப்பதாகவும் கொல்லப்படுகின்றது.

